# "இனக்குழுக்களுக்கிடையிலான நல்லுறவை மேம்படுத்துவதில் சமய செயற்பாடுகளின் பங்கு: அம்பாறை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சமய நிகழ்வுகளை மையப்படுத்திய ஒரு சமூகவியல் ஆய்வு"

**Supervisor**
*Mr. SM. Ayoob,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Mr. MSM. Sabreen,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts and Culture*

இன்றைய உலகையே உலுக்கி அச்சுறுத்தி அதன் அபிவிருத்தியை முடக்கிக் கொண்டிருக்கும் பாரிய யுத்தங்களுக்கு பிரதான காரணியாக அமைவது இனங்களுக்கிடையே காணப்படுகின்ற முரண்பாடுகளாகும். இந்த முரண்பாடுகளின் காரணமாகவே இலங்கை கடந்த 3 தசாப்த காலமாக பேரழிவுகளை சந்தித்து வந்தது. இதன் பின்னணியிலேதான் அம்பாறை மாவட்டமும் அக்காலப்பகுதியில் பல்வேறு இன வன்முறைகளை சந்தித்திருக்கிறது. இருந்தும் எவ்வாறான முரண்பாடுகக்கு மத்தியிலும் தமது வேற்றுமைகளை மறந்து ஏனைய சமய நிகழ்வுகளில் பங்கெடுத்து ஒன்றாய் காலம்கழித்த வரலாறுகளும் உண்டு. அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு வெவ்வேறு சமய நிகழ்வுகளை தெரிவு செய்து அவை எவ்வாறு இனக்குழுக்கழுக்கிடையேயான நல்லுறவை மேம்படுத்துவதில் தமது பங்களிப்பைச் செய்கினறன என்பது சம்மந்தமாக அறிவதற்காகவே இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. சமய நிகழ்வுகளின் செயற்பாடுகள், அங்கு இடம்பெறுகின்ற நிகழ்வுகள், அதில் கலந்து கொண்டதன் பிற்பாடு மக்கள் மனதில் ஏற்பட்ட மாற்றங்கள் போண்றவற்றையும் இது ஆய்வு செய்தது. இது முதலாம்நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளை பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல்நிலைத்தரவுகளாக வினாக்கொத்து(60), இலக்குக்குழு கலந்துரையாடல், பேட்டி காணல், கள ஆய்வு போன்றனவும் இரண்டாம்நிலைத் தரவு மூலங்களாக வரலாற்று நூல்கள், சனத்தொகை மதிப்பீட்டுத்திணைக்கள அறிக்கைள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றுடன் இணையத்தளங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் இனக்குழுக்களிடையே நற்புறவு, திருமண உறவு, குடும்ப ரீதியான உறவு மற்றும் சுக துக்கங்களில் பங்கெடுத்தல் போன்ற தொடர்புகளை சமய நிகழ்வுகள் ஏற்படுத்தியுள்ளன அத்தோடு அபிவிருத்தி, சிரமதானம் போன்ற பொது செயற்பாடுகளில் நான்கு இனங்களும் பரஸ்பரம் ஒற்றுமையாக பங்கெடுக்கின்றனர் போன்ற விடயங்கள் இனங்காணப்பட்டதோடு இனக்குழுக்கழுக்கிடையிலான நல்லுறவை மேம்படுத்துவதில் சமய செயற்பாடுகள் காத்திரமான பங்களிப்பைச் செய்கின்றன என்பதை இவ்வாய்வு முடிவாக உரைப்பதோடு அதனை மேலும் வளர்க்க சில பரிந்துரைகளையும் முன்வைக்கிறது.